Y.M.C.A வாசிகசாலை

# எரிபொருள், பசளை, கிருமிநாசினி தட்டுப்பாட்டினால் யாழ்மாவட்டத்தில் நெல் உற்பத்தி முப்பது வீதமே தேறும்

யாழ் மாவட்டத்தில் நெல் உற்பத்தி எதிர்பார்த்த அளவில் முப்பது சதவீதமே தேறும். எரிபொருள், உரம், கிருமிநாசினி முதலியவற்றுக்கான தடை தொடர்ந்தும் அமுலிலிருந்தால் நெல் உற்பத்தி வீழ்ச்சியுறும் அபாய நிலை ஏற்படும் என யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. க குணரத்தினம் தெரிவித்தார். யாழ் மாவட்டத்தில் 12 000 ஹெக்ரர் நிலப்பரப்பில் 24 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. தென்பகுதியில் இருந்து பசளை வராத காரணத்தால் விளைச்சல் 40 வீதம் குறையும் நிலையும், பூச்சிப்பாதிப்பு, நோய்கள் என்பவற்றுக்கு விவசாயிகள் உரிய காலத்தில் கிருமிநாசினிகளைப் பிரயோகிக்காததால் ஐந்து சத வீத வீழ்ச்சியும் ஏற்படலாம் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. எரிபொருளின்மையால் உழவு யந்திரம் பயன்படுத்தப்படாததும் விளைச்சலைப் பாதிக்கும் மற்றொரு காரணியாகும் எதிர்பார்த்த விளைச்சலான 22 ஆயிரம் மெற்றிக் தொன்னில் 45 சத வீதம் வீழ்ச்சியடையக் கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது இதனால் அரிசியின் விலை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாகவும் தெவிக்கப்படுகிறது. (32)

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-50

முரசொலி

முரசு 05 ஒலி 28 பிரமோதூத மார்கழி 10 (25-12-1990) செவ்வாய்

## நிவாரணப் பொருட்களை விற்க முயற்சி கூட்டுறவுச் சங்க இயக்குனர் மீது விசாரணை

அளவெட்டி - மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை உறுப்பினர் ஒருவர் தற்போது வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை மோசடி செய்து கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக உள்ள தனியார் கடை ஒன்றில் விற்க முயன்றாராம் இச்சமயம் இவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் நெல்லிப்பழை பொறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டார். இவரது வீட்டில் இருந்தும் சீனி, மா, லக்ஸ்பிறே போன்ற உணவுப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக விற்பனையாளரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (48)

# திருகோணமலையில் கண்ணிவெடி

# பத்தொன்பது படையினர் பலி!

### சிப்பாய் குடும்பத்தினர் மூவரும் சிக்கினர்

**திருகோணமலை - அனுராதபுரம் எல்லைப் பகுதியில் நேற்று விடுதலைப்புலிகள் நடாத்திய கண்ணிவெடித்தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 19 படையினர் கொல்லப்பட்டனர் இவர்கள் பயணம் செய்த ராணுவ வண்டியும் முற்றாகச் சேதமடைந்தது.**

நேற்றுக்காலை 8. 30 மணியளவில் திருமலை - அநுராதபுரம் எல்லைக்கருகில் ஹொரவபொத்தான பண்டாரக்கும்பர என்ற பகுதியில் இராணுவத்தினர் சென்ற கனரக வாகனம் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதால் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இதில் இரு அதிகாரிகள் உட்பட பத்தொன்பது படையினர் பலியாகினர், ஐந்து படையினர் படுகாயமடைந்தனர்.

இவர்களைத் தவிர மேலும் மூன்று பேர் பலியானதாகவும், இம் மூவரும் ஒரு சிப்பா

—04 ஆம் பக்கம் பார்க்க

## குருநகரில் ஷெல் வெடித்தது

நேற்றுப் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் ஒன்று குருநகர்ப் பகுதியில் பாரிய சத்தத்துடன் விழுந்து வெடித்தது. (ப- 11

## நாற்பது பெண்களின் சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பில் நேற்று நாற்பது இளம் பெண்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# நொச்சியாகமவிலும் கண்ணிவெடி

## 6 படையினர் பலி; 3 வாகனங்கள் சேதம்

அநுராதபுரம் மாவட்டம் நொச்சியாகம ராணுவ முகாமிற்கு அருகில் நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் 6 படையினர் பலியாகினர். அவர்கள் வந்த வாகனமும் புலிகளால் சேதமாக்கப் வாகனம், ட்ரக் ஆகியவற்றில் மருதமடு ராணுவ முகாமிற்கு சென்று கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நொச்சியாகம ராணுவ முகாமில் இருந்து சிறிது தூரத்தில் வைத்து கண்ணி னர். இவர்கள் பயணம் செய்த மூன்று வாகனங்களும் சேதமாகின. படையினரிடம் இருந்து

- ★ ரி56ரகத் துப்பாக்கிகள்-4
- ★ ரவைக்கூடுகள்- 14
- ★ ஜே ஆர். குண்டுகள்- 3

# யாழ் மாவட்டத்தில் மேலும் 5 உதவி அரச அதிபர் பிரிவுகள்

யாழ் மாவட்டத்தில் மேலும் ஐந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை ஏற்படுத்துவது தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போதுள்ள பதின்நான்கு உ. அ. அதிபர் பிரிவுகளோடு காரைநகர், புங்குடுதீவு, கொடிகாமம் மற்றும் வேறு இரு புதிய பிரிவுகளையும் ஏற்படுத்தவுள்ளதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

கோப்பாய் உ அ. அதிபர் பிரிவை இரு பிரிவுகளாக்கும் போது மற்றைய பிரிவு அச்சுவேலி உ. அ. அ பிரிவாகவும், யாழ்ப்பாணம் நல்லூர் ஆகிய இரு பிரிவுகளில் இருந்து மேலும் வண்ணார் பண்ணை என்ற மூன்றாவது உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஏற்படுத்தப்படவும் ஆலோசிக்கப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

இதேவேளை தற்போதுள்ள 435 கிராமசேவை அலுவலர் பிரிவுகளும் 300 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவை அலுவலர் என்ற ரீதியில் எழுநூறுக்கும் அதிகமான கிராமசேவை அலுவலர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உண்மைக்குப்புறம்பான தகவல் கொடுத்து கொழும்பில் ஒய்வூதியம் பெறுகின்றனர்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த முந்நூறுக்கும் அதிகமான ஒய்வூதியம் பெறுவோர் தமது ஒய்வூதியப் இவர்கள் கொழும்புக்குச் சென்று தமக்கு வழங்கப்படாதிருந்த ஒய்வூதியத்தைப் பெற்றனர். ஊதியத்தைப் பெற்றவர்கள் யாழ் செயலக ஒய்வூதியக்கிளை செயற்படுவதில்லை என்றும் அதனால் தாம்

கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் 6 படையினர் பலியாகினர். அவர்கள் வந்த வாகனமும் புலிகளால் சேதமாக்கப்பட்டது.

கடந்த வெள்ளியன்று நொச்சியாகம ராணுவ முகாமில் இருந்து ஜீப், பவள்கவச

யினர் மீது விடுதலைப் புலிகள் நொச்சியாகம ராணுவ முகாமில் இருந்து சிறிது தூரத்தில் வைத்து கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் ஆறு படையினர் கொல்லப்பட்ட

இருந்து

★ ரி56ரகத் துப்பாக்கிகள்-4
★ ரவைக்கூடுகள்-14
★ ஜே ஆர். குண்டுகள்-3
★ ஐ. எம். ரவைகள்-328

என்பன புலிகளால் மீட்கப்பட்டன.

இச்சம்பவத்தில் புலிகள் தரப்பில் லெப். சசி(செட்டிக்குளம்) வீரமரணமடைந்தார். (71)

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த முந்நூறுக்கும் அதிகமான ஓய்வூதியம் பெறுவோர் தமது ஓய்வூதியப் பணத்தை கொழும்பிலுள்ள ஓய்வூதியத் தலைமை அலுவலகத்தில் பெற்றுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக ஓய்வூதியப் பணத்தை யாழ் மாவட்டத்தில் பெறுவதில் உள்ள கஷ்டங்களையடுத்து இவர்கள் கொழும்புக்குச் சென்று தமக்கு வழங்கப்படாதிருந்த ஓய்வூதியத்தைப் பெற்றனர்.

இதேவேளை இவ்வாறு கொழும்புக்குச் சென்று ஓய்வூதியத்தைப் பெற்றவர்கள் யாழ் செயலக ஓய்வூதியக் கிளை செயற்படுவதில்லை என்றும் அதனால் தாம் ஓய்வூதியத்தைப் பெற முடி

— 04 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் கடலில் கடற்படை சுட்டு ஒருவர் பலி

காரைநகர் வேரப்பிட்டிக் கடற்பகுதியில் கட்டுமரத்தில் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் மீது விசைப் படகில் வந்த கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தில் ஐயம்பிள்ளை சோதி(38) என்பவர் கொல்லப்பட்டார்.

ஏனையோர் கடலில் குதித்து தப்பினர். இறந்தவரது உடல் கடற்படையினரின் நடமாட்டத்தால் அப்பகுதியில் இருந்து இதுவரை மீட்கப்படவில்லை. (ப-31)

### ஆனையிறவில்

## குண்டு வெடிப்பையடுத்து முகாமிலிருந்து ஷெல் வீச்சு

ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து 200 யார் தூரத்தில் காவல் அரண் அமைக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது புதைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்தது சேத விபரம் தெரியவில்லை.

இதனையடுத்து முகாமைச் சுற்றிய பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் 1 மணிவரை நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் சேதம் ஏற்படவில்லை. (71)

## மாவிட்டபுரத்தில் மோதல் 4 புலிகள் வீரமரணம்

நேற்றுமுன்தினம் பிற்பகல் 5 மணியளவில் மாவிட்டபுரம் இரயணுவ மினி முகாமில் இருந்து விடுதலைப் புலிகள் காவல் அரண் நோக்கி முன்னேற முற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் முன்னேறி தாக்குதல் மேற்கொண்ட போது பலத்த சண்டை நடைபெற்றது தொடர்ந்து ராணுவம் பின் வாங்கியது.

இச் சண்டையில் இராணுவத் தரப்பில் சேதவிபரம் தெரியவில்லை விடுதலைப் புலிகள் தரப்பில் 4 போராளிகள் வீர மரணமடைந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

## வயாவிளான் வடமூலையில் மேலும் பல வீடுகள் தகர்ப்பு

வயாவிளான் வட மூலைப் பகுதியில் உள்ள பல வீடுகளை அண்மையில் பார்க்கச் சென்றோர் வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டுள்ளமையைக் கண்டு அதிர்ச்சியுடன் திரும்பினர்.

ஏற்கனவே வடமூலைப் பகுதிகளில் பல வீடுகள் இராணுவத்தால் தகர்க்கப்பட்ட போதிலும், பின்பும் இருந்த

— 4 ஆம் பக்கம் பார்க்க

### இரண்டு பவுணுக்கும் மேலதிகமாக

## மீட்புநிதி வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன

தமிழீழ மீட்பு நிதிக்கு இரண்டு பவுணும் மேலதிகமாகவும் பங்களிக்க ஒப்புதலளித்த நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய். உடுவில், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தமது பங்களிப்பைச் செலுத்துவதற்கு வசதியாக இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் மீட்புநிதி திரட்ட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுளளதாக விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்மாளர் அறிவித்துள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

### மா கொள்வனவு தொடர்பாக

## பாண் பேக்கரி உரிமையாளர் அரசாங்க அதிபரிடம் புகார்

யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் மா கொள்வனவு பற்றி அரசாங்க அதிபரிடம் விடுத்த கோரிக்கை தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் வெளிச்சந்தையிலேயே மா கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட விலை நிர்ணயத்திற்கு பாலண விற்க முடியாதிருப்பதாகவும் அதனால் நேரடியாகக் கப்பல் மூலம்

— 4 ஆம் பக்கம் பார்க்க

**போற்றி அருளுக - 3**

## தித்திக்கப் பேசும் முத்துநகை

மனோன்மணி, வாட்கண்ணி, நேரிழை— இவர்கள் மூவரும் திருவண்ணாமலை வாசிகள். மார்கழி மாதத்து வைகறைப் பொழுதிலே அவர்கள் வீடு வீடாகப் போய்த் தமது தோழியர்களைத் துயில் எழுப்புகிறார்கள். எழுப்பிக்கொண்டு தாமரை பூத்துத் தண்புனல் நிரம்பிய பொய்கையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

போகும்போது அவர்கள் மவுனமாகப் போகவில்லை. பாட்டும், கதையும் பரிகாசப் பேச்சும் கேலியும் கிண்டலும் நிரம்பிய குதூகலமான ஒலிகள் அந்த இனிமையான சூழலைக் கலகலப்பு ஆக்குகின்றன.

விளையாட்டுச் சிறுமிகளானாலும் அவர்கள் வீண் பேச்சுப் பேசவில்லை. தலைவன் நினைவு சற்றேனும் நீங்காத தங்கச்சிலைகள் அவர்கள். உடலழகு உடையவர்கள். உள்ளத்தாலும் அழகியவர்கள். தேசமும் அழகானது. சித்தமும் மிக மிக அழகியது. அவர்கள் சித்தம்—அழகியார்.

நேரிழையின் வாயிலிருந்து சிவநாமங்கள் மந்திரங்களாக வெளிப்படுகின்றன. அவள் தன்னை மறந்தாள்; தன்நாமம் கெட்டாள். தலைவனின் திருப்பெயர்களையே ஓதுகிறாள். "தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனார்க்கு அன்புடையோம் யாம்"

"இது முத்துநகையின் வீடுதானே?"

"உண்மையிலே அவள் புத்திசாலிதான்"

"புத்திசாலியா, ஞானியா?

"ஞானி என்றும் கூறலாம். எங்கள் எல்லாரையும்விட [ஆழமானவள், அவள்"

"பார்த்தாயா, வாட்கண்ணி? நான் சொன்னேன் அல்லவா, அவள் அன்பு முதிர்ச்சி உடையதென்று? நாட்பட்ட பக்குவமான பக்தி—முத்துநகையுடையது' அவளோடு ஒப்பிடும்போது நாங்களெல்லாம் வெறும் கற்றுக்குட்டிகள், இளங்கன்றுகள்"

"முத்தன்ன வெண்நகையாய்!"

"முன்வந்து எதிர் எழுந்து என்
அத்தன், ஆனந்தன், அமுதன் என்று
அள்ளூறத்
தித்திக்கப்பேசுவாய்
வந்து உன் கடைதிறவாய்"

"கதவைத் திறவுங்கள், அக்கா"

"நிறைந்த பத்திமை உடையவர்கள் நீங்கள். பழுத்த அன்பு பூண்ட பழைய அடியார்! நாங்கள் எல்லாம் என்ன? வெறும் சாதாரணம்!"

"முந்தநாள் முளைத்து வந்த புதிய அடியார்கள் நாங்கள். எங்களிடையே குறைபாடுகள் நிறைய இருக்கும்; அறியாமை அதிகமாக இருக்கும். எங்கள் சிறுமையைத் தீர்த்து எம்மை ஆடகொள்ள வேண்டும். அப்படிச் செய்வது ஒன்றும் பொல்லாத காரியம் அல்லவே! நல்ல கருமம் தானே!'

"எத்தோ நின் அன்புடமை
எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார்
பாடாரோ நம் சிவனை?
இத்தனையும் வேண்டும்
எமக்கு"

முத்துநகை தனது இறையன்பிலே இறுகிய உறுதி கொண்டவள். அவளைப் போற்றி ஏற்றுக்கொள்ளும் ஏனைய பாவையர்கள், முத்துநகையைத் தமது வழிகாட்டியாகக் கருதிக்கொள்கிறார்கள்.

தீர்த்தக்கரையை நோக்கி யாத்திரை போகும் செல்வியர்களுடன் முத்துநகையும் சேர்ந்து கொள்ளுகிறாள். திருவெம்பாவையரின் திருக்கூட்டம் சிறிது சிறிதாக வளர்கிறது. வழி நெடுக வீடுகள்; வீடுகள்

### வல்லைக் கூட்டத்தில் அன்ரன் பாலசிங்கம்

# "உலகத்தமிழரின் ஒரே தலைவர் பிரபாகரனே கருணாநிதி இழைப்பது துரோகம்"



"தமிழர் மானத்தையும், வீரத்தையும் நிலை நாட்ட வல்ல ஒரே தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தான் என்ற பேருண்மையை உணர்ந்து அதனைச் செயல் பூர்வமாக வெளிப்படுத்தியதுடன், தலைவரிடமே அதனைக் கூறியவர் மறைந்த தமிழக முதலமைச்சர் அமரர் எம். ஜி. ஆர். அவரது தீர்க்க தரிசனம் இன்று நிதர்சனமாகிவிட்டது"

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

வல்வை - நெடியகாட்டில் நடைபெற்ற மாங்குளம் முகாம் தகர்ப்பு ஒரு திங்கள் நிறைவு வெற்றி விழா—கரும்புலி லெப். கேணல் போர்க் நினைவு நாள் தொடர்பான மாபெரும் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில், "தமிழகத்தில் தலைவர் உள்ளிட்டு நாம் மிக இக்கட்டான நிதி நெருக்கடி நிலையிலிருந்தபோது கைகொடுத்து உதவியவர் எம். ஜி. ஆர். நமது போராளிகளுக்கான ஆயுத பலத்தின் தேவையை உணர்ந்த எம். ஜி ஆர். நாம் எதிர்பார்த்ததிலும் பார்க்க மிகக் கூடுதலாக இரண்டு கோடி ரூபாவைத் தந்து எமக்குக் காலமறிந்து ஊக்கம் தந்தார்.

### நெருக்கமும் நேசமும்

தலைவர் பிரபாகரனைச் சந்திக்க அவர் ஆவல்கொண்டு அது சாத்தியமானபோது இருவரும் உணவுண்டு, பரஸ்பரம் புரிந்துணர்வை வலுப்படுத்தி, தந்தை— மகன் இடையிலான நெருக்கமும் நேசமும் கொண்டனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் எம். ஜி. ஆர். தலைவரை அழைத்து தான் நடித்த ஒரு சில திரைப்படங்களின் அம்கங்களை தொலைக் காட்சியில் போட்டுக் காண்பித்து தம்பி நான் வீரம் மிக்கவனாக மக்களுக்காகப் போராடுபவனாக படங்களில்நடித்து, சம்பாதித்தேன். என் படங்கள் மக்களுக்கு எழுச்சியைத் தந்தன. ஆனால் நீயோ மக்களுக்காக எந்த சுயநலத்தையுமே எதிர்பாராது அல்லும் பகலும் போராடுகின்ற தூய தலைவன் என்று வெகுவாகப் பாராட்டி வாழ்த்தினார்.

### கருணாநிதி இழைத்த துரோகம்

இக்கட்டத்தில் நாம் மற்றொன்றையும் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. தற்போதைய முதலமைச்சர் மு கருணாநிதி அந்தநேரம் தன் பிறந்த நாளின்போது ஈழத்தமிழர் துயர்துடைப்புநிதி எனப் பெருந்தொகை சேகரித்து அதில் நாம் உள்ளிட்ட ஐந்து இயக்கங்களை அழைத்து தலா ஐம்பதாயிரம் தர முன்வந்தார். நாம் அதனைப் பெற விரும்பவில்லை.

—04 ஆம் பக்கம் பார்க்க

## சஹாய் புதிய தகவல்

தமிழகத்தில் விடுதலைப் புலிகளால் சட்டம் ஒழுங்கு நிலை சீர்குலைகிறது என்ற தி.மு.க அரசுக்கு எதிரான இந்திரா காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டிற்கு எதிர்மாறான விதத்தில் மத்திய உள்துறை இணையமைச்சர்திரு சுபோத்கான் சஹாய் பீகாரில் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழகம் கைதராபாத் (ஆந்திரத்தலைநகர்) மற்றும் உத்திரப்பிரதேசத்தின் சில பகுதிகளில் கலக நிலையைத் தூண்டிவிடும் குறிப்பிட்ட சில சக்திகள் இனம் காணப்பட்டிருப்பதாகவும் அவர்களைக் கைது செய்ய அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.


தமிழீழ போக்குவரத்துக்
**காவல்துறையினரின் விளம்பரம்**

**போக்குவரத்துக் காவலர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

அடிப்படைத் தகைமைகள்

1. உயரம்- 5 அடி 6 அங்.
2. மார்பளவு- 32 அங் (மூச்சு வெளியேறிய நிலையில்)
3. வயதெல்லை - 01. 01. 1991 - ல் 18 தொடக்கம் 30வரை.

கல்வித் தகைமை

க. பொ. த சாதாரணம் தமிழ் மொழி அல்லது தமிழ் இலக்கியத்தல் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விசேட தகைமைகள்

1. சாரணியம்
2. முதலுதவிப்படை
3. விளையாட்டு

இதில் ஏதாவது ஒன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

1. உதவிப்பணம் வழங்கப்படும்.
2. யாழ்மாவட்டத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 30.12 1990 க்கு முதல் அல்லது அன்று சொந்தக் கையெழுத்தில் தயாரித்து பின்வரும் முகவரியில் நேரில் கையளிக்கவும்.

**போக்குவரத்து காவல்துறை,
கோண்டாவில்.** 12159



## தொழிற் பயிற்சிகள்

★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**
சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் தொழிற்பாடு திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
**காலம்: 5 மாதம்**

★ **றீவைண்டிங்**
மின்மோட்டார், விசிறி, டைனமோ றீவைண்டிங் செய்தல். பயிற்சியளிக்கப்படும்.
**காலம்: 3 மாதம்**

★ **எலக்ரிக்கல் வயறிங்**
வீட்டு மின்சாரவேலை, மின்சாரபொருள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.

இறாள். திருவெம்பாவையரின் திருக்கூட்டம் சிறிது சிறிதாக வளர்கிறது. வழி நெடுக வீடுகள்; வீடுகள் தோறும் மின்னற் கொடிகள், விளையாட்டுச் சிறுமிகள். கன்னியர் படை கலகலப்பாக முன்னேறுகிறது. பொய்கையை நோக்கி.

'சித்தமழகியான்'


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இந்திய வெளியீடுகளுக்கு நிகரான அஷ்டலக்ஷ்மி பாலர்தமிழ் ரூபா 12/- எம்மிடம் கிடைக்கும். நாயகபாலன் மானிப்பாய். கணேஷ்காரை நகர். பூபாலசிங்கம், மண்டேலா யாழ்ப்பாணம். 12148

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர், 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12158


## திருவெம்பாவை மனனப் போட்டி

பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கம் திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு திருவெம்பாவை பாடல் மனனப் போட்டியொன்றை இம்மாதம் 30ஆம் திகதியன்று நடாத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்று மூன்று பிரிவுகளாக இப்போட்டி நடாத்தப்படும் என்றும், இப்போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் உடனடியாக தங்கள் விண்ணப்பங்களைச் சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(13)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்

10 - 7 - 1969

மறைவு

25 - 12 - 1988

### செல்வராசா பால்வண்ணன்

அன்பாலும் பாசத்தாலும்  
பண்பாலும் எம்மைக் கவர்ந்த  
பால்வண்ணனா நீர் எம்மைப்  
பிரிந்து ஆண்டிரண்டு ஆகிவிட்டது.  
நீ எங்களை விட்டு ஓடினாலும்  
திருவுள்ளம் எம்மனதில் உள்ளது.

பெற்றோர்,  
சகோதரர்கள்.

வாடி ஒழுங்கை,  
வல்வெட்டித்துறை.

12143

வீட்டு மின்சாரவேலை, மின்சாரபொருள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.  
காலம்: 2 மாதம்

★ **Computer programming IN BASIC Language**  
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.  
காலம்: 4 மாதம்

★ **DIPLOMA IN DRAUGHTSMANSHIP**  
காலம்: 4 மாதம்

★ **Spoken English**  
ஒரு மாத முழுநேர வகுப்பு  
சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறும்.

மீண்டும் ஆரம்பம்: 02.01.1991 (கிழமை நாட்கள்)  
30. 12. 1990 (சனி, ஞாயிறு)

குறிப்பு:-முன்னர் நடைபெற்ற பயிற்சி வகுப்புக்கள் யாவும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**JAFFNA TECHNICAL INSTITUTE**  
ஸ்ரான்லி வீதி  
(றெயில்வே கடவைக்கு அருகாமை)  
யாழ்ப்பாணம்

12161

# முரசொலி

எமது சிந்தனை

1990 — 12 — 25 செவ்வாய்

''துக்கத்தினால் நான் மாய்ந்து போனேன். ஒவ்வோர் இரவும் அழுது அழுது என் படுக்கை நனைகிறது கண்கள் வீங்கி விட்டன; பார்க்க முடியவில்லை''

சங்கீதம் 6: 6-7

## ஜெருசலேம் மீண்டும் எழுக!

இன்று கிறிஸ்மஸ்.

தேவன் மண்ணகம் வந்த திருநாள்.

எமது பாவச்சுமையாகிய சிலுவையைத் தன் தோளில் சுமந்த மீட்பர் அவதரித்த நன்னாள்.

மானுடம் மகிமை பெற்ற மகத்தான நாள்.

ஐந்து கண்டமும் இப்பெருநாளைக் கொண்டாடுகிறது.

ஈழத்தவராகிய எமக்கு இந்த நத்தார் கொண்டு வரும் செய்தி என்ன?

கொண்டாட்டமும் கோலாகலமும், கேக்கும் கேளிக்கைகளுந்தாமா கிறிஸ்மஸ்? நாட்டையும் மக்களையும் அந்தகாரம் சூழ்ந்திருப்பதை நாம் உணரவில்லையா? செல்லும் வழி இருட்டாகவும், சுமைகள் கனமாகவும், உடலம் சோர்வால் துவண்டு விழுவதும் கண்டு மத போதகர்கள் கூட செய்வதறியாது திகைத்து நிற்கவில்லையா?

ஏரோது பாலகர்களைத் தேடித் தேடிக் கொன்றது போல, சீருடை தரித்த ஏரோதுக்கள் தமிழ் மக்களை வேட்டையாடி வருகின்றனர்.

நரிகளுக்கு வளைகளும் பறவைகளுக்கு கூடுகளும் இருக்க, நம் மக்கள் தம் சொந்த வீடுகளை இழந்து அகதி முகாம்களிலும் காடுகளிலும் வாடுகிறார்கள்.

அந்நாளைய அதிகார பீடம் இயேசு பெருமானை எவ்வாறு கொடுமைப்படுத்தியதோ, அவ்வாறே இந்த அரசாங்கமும் தமிழ்மக்களை - ஒட்டு மொத்தமாக - சந்தேகத்தோடு நோக்குகிறது; தண்டிக்கிறது.

இந்த நாட்டில் கல்வாரிகள் பெருகிவிட்டன.

யூதாஸ்களும் ஆசாரியர்களும் வேதபாரகர்களும் இந்நாளிலும் கொக்கரிக்கிறார்கள். முள்முடி சூட்டுகிறார்கள்; முகத்தில் துப்புகிறார்கள்; சவுக்கால் அடிக்கிறார்கள் போர் வீரர்கள். உடைகள் - அங்கிகளை மட்டுமன்றி, உடைமைகளையும் பங்கு போட்டுக் கொள்கிறார்கள்.

ஆண்டவர் திக்கற்றவர்கள் பக்கம் - ஏழைகள், அகதிகள், நோயாளிகள் பக்கம் - நின்றார். அவர் வழி செல்லும் நாம் அல்லற்பட்டு ஆற்றாது அழும் அனைத்து மக்களுக்கும் ஆதரவு தருவோம்; அவர்கள் கண்ணீர் துடைப்போம். எம்மிடம் இருப்பதை ஏழை, எளியவர்களோடு பகிர்ந்து கொள்ளுவோம். எமது

# முரசொலி நத்தார் சிறப்பு மலர்

## நத்தார்த் தாத்தா வரலாறு

ஆண்டுதோறும் மார்கழித் திங்கள் 25 ஆம் நாள் உலகெங்கும் கொண்டாடப்படும் நத்தார் பண்டிகை என்றதும் நம்மில் அனேகமானவர்களுக்கு விசேடமாகச் சிறுவர்களுக்கு நினைவில் வருவது - பருத்த உடல், சிரித்த முகம், பனி போன்ற வெண்ணிறத் தாடி கோமாளிகள் அணிவது போன்ற பனிக்குல்லாய், சிவப்பு நிறத்தில் வெள்ளை நிறத்தால் அலங்கரிக்கப்பட்ட நீண்ட கம்பிளி மேலங்கி, தோளில் தொங்கும் மூட்டை, கையில் ஓர் ஊன்றுகோலுடன் காட்சி தரும் நத்தார் தாத்தாவே.

சாந்தாக் கிளாஸ் என்று அழைக்கப்படும் இந்த நத்தார் தாத்தா தோன்றிய வரலாறு மிகவும் சுவாரசியம் ஆனது.

16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 'மீரா' என்ற நகரில் நீக்கிலஸ் அடிகளார் மேற்றிராணியாராக இருந்தார். இவர் மிகவும் இளகிய சுபாவம் உடையவர். பிறர் துன்புறுவதை அல்லல் படுவதைக் காணச் சகிக்காதவர் இதனால் இரவு பகல் என்று பாராது துன்புறுவோரின் துயர் துடைப்பதற்காகத் தன்னால் இயன்றவற்றை எல்லாம் செய்து வந்தார். பலருக்கு எண்ணற்ற உதவிகளை இவர் செய்திருந்த பொழுதிலும், தான் தான் அவற்றைச் செய்ததாக ஒரு பொழுதும் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார்.

ஒரு சமயம் ஓர் ஏழைக் குடியானவன் தன்னுடைய மூன்று பெண்களுக்கும், திருமணம் செய்து வைக்க வழியறியாது தினமும் வழிபாட்டுத் ஸ்தலத்திற்குச் சென்று அங்கு அழுது, குளறிப் பிரார்த்திப்பதை அவதானித்த மேற்றிராணியார் அந்தக் குடியானவனின் துயர் துடைப்பதற்காக அவன் குடிசையில் இருந்த புகைபோக்கி ஊடாக, அவ்வூர் தனவந்தர்களிடம் இரந்து சேகரித்த பொற்காசுப் பொதியைப் போட்டார், அதனைப் பெற்ற குடியானவன் தனது மூன்று பெண்களுக்கும் ஒரு சில நாடகளில் சிறப்பாகத் திருமணம் செய்து வைத்தான். குடியானவனுக்குப் பணம் கிடைத்த அந்த நாள் கிறிஸ்மஸ் பண்டிகை நாளென்பது குறிப்பிடத்தக்கது.

சிறிது காலத்தின் பின் தனக்கு அந்த மாபெரும் உதவியை கைம்மாறு கருதாமல் செய்தவர், புனித நீக்கலஸ் என்பதை ஏதோவிதத்தில் அறிந்த அக்குடியானவன், நன்றிக் கடனாக நத்தார் தாத்தா என்ற ஒரு பாத்திரத்தை அவர் நினைவாக உருவாக்கி நத்தார் பண்டிகை காலத்தில் சிறுவர்களுக்கு பரிசுப் பொருள்களை வழங்கும் பழக்கத்தை ஆரம்பித்து வைத்தான் என்று கூறப்படுகிறது.

ஆனால் இன்று உலகெங்கும் நத்தார்ப் பண்டிகையின் ஓர் அங்கமாகக் கருதப்படும் நத்தார்த் தாத்தாவின் உருவ அமைப்பும் தோற்றமும் இன்று இருப்பது போல் இருக்கவில்லை என்பது வத்திக்கானில் உள்ள பண்டைக் காலக் கல்வெட்டுகளில் இருந்து தெரிய வருகிறது.

பல நூற்றாண்டுகள் வரை நத்தார் தாத்தா கௌரவம் மிக்க நிதானமான பரிசுகளை வாரி வழங்கும் வயோதிபராகத்தான் உருவாக்கப்பட்டிருந்தார்.

காலப்போக்கில் அதாவது 1822-ம் ஆண்டளவில்தான் இக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்ற அங்க லட்சணம் பொருந்திய, குதூகலம் மிக்க குண்டுத் தாத்தாவாக நத்தார்த் தாத்தா மாற்றப்பட்டார். இவரை உருவ மாற்றம் செய்தவர் ஓர் அமெரிக்க பேராசிரியர் — டாக்டர் க்ளெமெண்ட் ஸீ மூர் என்பவராவர்.

நியூயோர்க்கில் உள்ள கொலம்பிய சர்வகலாசாலையில் பேராசிரியராகக் கடமையாற்றிய மூர் தமது நண்பர்களின் பிள்ளைகளுக்கு நத்தார்ப் பரிசுகளை வழங்குவதற்கு ''ஸ்லெட்ஜ்'' என்றழைக்கப்படும் பனிச் சறுக்கு வண்டியில், அவரின் ஒன்பது குழந்தைகளுடன் சென்று கொண்டிருக்கையில் அவரின் குழந்தைகள் புனித நீக்கலஸ் பற்றியும், அவர் உருவாக்கிய கிறிஸ்மஸ் தாத்தாவைப் பற்றியும் கூறும்படி நச்சரிக்கவே இயல்பாகவே கவிதை புனைவதில் விற்பன்னரான மூர், கவிதை ஒன்றைப் பாடிக் குழந்தைகளின் ஆசையைப் பூர்த்தி செய்தார்.

## அமைதியின் ஆண்டவர் உதயமாகட்டும்

— சுவாமி ஜீவா போல்

''உன்னதங்களில் கடவுளுக்கு மகிமை
உலகில் அவர் தயவு பெற்றவருக்கு அமைதி''



இதுவே கிறிஸ்மஸ் இரவில் தூதர்களின் வாழ்த்தொலி. கிறிஸ்மஸ் ஓர் அமைதியான இரவு என்பது பலருக்கு ஒரு பகற்கனவாகிறது. காரணம்; ஏழ்மை, ஏமாற்றம், விரக்தி வெறுமை பலரது தூக்கத்தையே குழப்புகின்றன. அநீதியின் கோரப் பற்கள் பலரின் இழகிய இதயங்களைக் காயபபடுத்தி விட்டன. உயிர்கள் உடைமைகள் இழந்து உரிமைகளைப் பறிகொடுத்த தமிழ்த் தாய் அவலக்குரல் எழுப்புகின்றாள். உலகில் அமைதி எக்காலத்திலும் இருந்ததோ, இருக்கிறதோ, இருக்குமோ என்பதே ஒரு சந்தேகம்.

உண்மையில் அமைதியைத் தேடுவோர் அதன் பொருள் புரியாமலும் அதற்கான பாதையைத் தெரிந்துகொள்ளாமையும்தான் அமைதியின் சிதைவுக்குக் காரணம் வேதாகமத்தில் 'ஷலோம்' என்ற எபிரேய சொல்லுக்குச் சாந்தி. சமாதானம் என்று பொருள். பைபிளின் கண்ணோட்டத்தில் மனிதனின் முழுநலன்களையும் சார்ந்ததுதான் அமைதி. எனவே அமைதி என்பது —

வெறும் மௌனம பூத்த மோன நிலையன்று,
தியானத்தின் யோக நிலையுமன்று.
நிம்மதி சொட்டும் ஆலய வாசலன்று.
ஒற்றை மனிதனின் செயலிழந்த தூக்கமன்று!

மாறாக இறைவனோடும் மனிதனோடும் ஒப்புரவானதால் ஒரு சமூகமும் அதன் அங்கத்தவரும் கொடையாகப் பெறும் ஒரு பரிபூரண வாழ்வுதான் அமைதி.

உறவுகள் முறிந்த நிலையில் அமைதி கானல் நீராகிறது. உலகைப் பேண உரிமை காக்கப்பட வேண்டும் உரிமை நிலைக்க உண்மையும், நீதியும் தழைக்கவேண்டும். உண்மை உயர அன்பும் சேவையும் பெருகிட வேண்டும். இவ்வுயர் பண்புகள் தனித்தும் கூட்டாகவும் இணைகின்றபோது அங்கு இறைமகன் இயேசு பிறக்கிறார்.

''நான் தரும் சமாதானமோ உலகம் தரும் சமாதானம் போல் அன்று'' என்று மொழிந்தார் இயேசு பெருமான் உலகமோ அமைதிக்கு வழி. பழிக்குப் பழி என்கிறது. அதிகாரம், அடக்குமுறை; ஆயுதம், வன்முறை இவ்வுலகத்தின் வாழ்க்கை முறை என்கிறது. அதனால் சம—தானம் நடப்பதில்லை. உரையாடல் உறங்கிவிட, அமைதி செத்துப்போகிறது.

கிறீஸ்து தம் அவதாரத்தில் கொணர்ந்த உண்மை அமைதியைச் சுவைக்க —

குடில்கள் அல்ல, உள்ளங்கள் தேவை.
யுத்தம் அல்ல, உரையாடல் தேவை.
பணப்பலம் அல்ல நல் — மனங்கள் தேவை.

செல்லும் நாம் அல்லற்பட்டு ஆற்றாது அழும் அனைத்து மக்களுக்கும் ஆதரவு தருவோம்; அவர்கள் கண்ணீர் துடைபபோம். எம்மிடம் இருப்பதை ஏழை, எளியவர்களோடு பகிர்ந்து கொள்ளுவோம். எமது தேவைக்கு மேல் எம்மிடம் உள்ள நாம் அநுபவிக்கும் - எதுவும் மற்றவர்களுக்கே உரியது என்ற - அதை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளாது விடுவது கடவுளிடம் களவெடுப்பதற்குச் சமம் என்ற - 'ஞானம்' பெறுவோம்.

அறுசுவை உண்டிகளில் அல்ல, அகதிமுகாம்களில்.

பட்டாசுகளின் ஒலியில் அல்ல, பட்டினி கிடப்போரின் தீனமான குரலில்;

படாடோபத்தில் அல்ல, எளிமையில்; இயேசு இருக்கிறார்; இருபபார்.

அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் ஆண்டவர். நீதிக்கும் சமத்துவததுக்குமான எந்தப் போராட்டத்துக்கும் அவர் ஆதரவும் ஆசியும் உண்டு.

நீதியும் சமத்துவமும் சமாதானமும் திகழும் ஒரு புதுய யுகம் மலாக.

ஜெருசலேம் மீண்டும் எழுக!

நம்பிக்கையோடு, விசுவாசத்தோடு, காத்திருப்போம் - அவருடைய இரண்டாவது வருகைக்கு!

அதுவே கிறிஸ்மஸ் தரும் மகிழ்ச்சி; மன நிறைவு!

உருவாக்கிய கிறிஸ்மஸ் தாத்தாவைப் பற்றியும் கூறும்படி நச்சரிக்கவே இயல்பாகவே கவிதை புனைவதில் விற்பன்னரான மூர், கவிதை ஒன்றைப் பாடிக் குழந்தைகளின் ஆசையைப் பூர்த்தி செய்தார்.

புனித நீக்கலஸ் விஜயம் என்று பிற்காலத்தில் தலைப்புக் கொடுக்கப்பட்ட இககவிதை நன்றாக அமைய வேண்டும் என்பதற்காக மூர் தமது கற்பனை வளத்தால் கையாண்ட வர்ணனைகளும், சொற் பிரயோகங்களும் மீண்டும், மீண்டும் அந்த அற்புதக் கவிதையைக் கேட்க அவரின் குழந்தைகளை மாத்திரம் அன்றிப் பிறரையும் தூண்டியது அத்துடன் எல்லாவற்றிற்கும் மேலாக முன்பு இருந்த நத்தார்த் தாத்தாவிற்கு மெருகூட்டிப் பொலிவுறச் செய்து, குதிரைகள் பல இழுக்கப் பனிக்கட்டியில் சறுக்கும் வண்டியில் வரும் இன்றைய கிறிஸ்மஸ் தாத்தா உருவாவதற்கும் ஏதுவாக அமைந்தது.

புனித நீக்கலசின் பண்பட்ட குணங்களை, வள்ளல் தன்மையை எடுத்தியம்புவதற்காக ஓர் அமெரிக்கப் பேராசிரியரால் இயற்றப்பட்ட கவிதையின் பயனாக உதயமான கேளிக்கையும், மகிழ்ச்சியும், குதூகலமும் பொங்கும் ஓர் பாத்திரம் இன்று நத்தார் உற்சவ காலத்தில் உலகக் குழந்தைகளை மகிழ்வூட்டி வருகிறது என்று கூறினால் அது மிகையாகாது.

20 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் விஞ்ஞானத்திலும், பல்வேறு துறைகளிலும் வியக்கும் விதத்தில முன்னேறி ஓர் உயர் நிலையை எட்டிப் பிடிக்கும் நிலையில் வாழ்ந்தாலும், பண்டுதொட்டு நம்மவர்கள் போற்றிப் புகழ்ந்து வந்த, மரபு வழிவந்த சில பழக்க வழக்கங்களும், சம்பிரதாயங்களும் இன்னும் எம்மை விட்டு அகலவில்லை, அகலமாட்டா என்பதற்கு நத்தார்ப் பண்டிகையும், அதனுடன் தொடர்பு கொண்ட நத்தாரித் தாத்தாவும் எடுத்துக்காட்டுக்களாகும்.

— கப்ரின் டீ. ஏ எம். குணசிங்கம்

குடில்கள் அல்ல, உள்ளங்கள் தேவை.
யுத்தம் அல்ல, உரையாடல் தேவை.
பணப்பலம் அல்ல நல் — மனங்கள் தேவை.

'நான்' என்னும் ஒருமையல்ல நாம் என்னும் கூட்டுத்தேவை. ஆண்டவன் பிறப்பில் மலர்ந்த அமைதியைச் சுவைக்க ஏக்கம் மட்டும் போதாது. அதற்கான ஊக்கமும் அவசியம். நல்ல உறவுகள் ஆல் போல் தழைக்க அமைதி என்ற நிழல் நிஜமாகிறது. கூட்டு வாழ்வுதான் அமைதியின் ஆண்டவன் பிறக்கும் குடியும் உறையும் கோவிலுமாகும். அமைதி பெருகட்டும்.



★ கிறிஸ்துவே மனிதகுலத்தின் மாபெரும் பரிசு இவ்வுண்மையை வெளிக்கொணர கிறிஸ்மஸ் காலங்களில் ஒருவருக்கொருவர் பரிசுப் பொருட்களை வழங்கும் பழக்கம் ஏற்பட்டது. படிப்படியாக இப்பழக்கம்வளர்ந்து பின்பு கிறிஸ்மஸ் மரத்தில் பரிசுப் பொருட்களைத் தொங்கவிடும்பழக்கம் உண்டாயிற்று.

★ கிறிஸ்து மனித அவதாரம் எடுத்துமனிதரிடையே வேரூன்றினார். அவர் இம்மண்ணில் மனிதரில் ஒருவராக வாழ்ந்ததோடு தம் உள்ளத்தை விண்ணகத்தந்தையை நோக்கியதாகவும் வைத்துக் கொண்டார். சுமது செயல்கள் எல்லாவற்றையும் அவரைப் பிரியப்படுத்தும் செயல்களாகவே செய்தார்.

# உலக அரங்கில்

## சோமாலியத் தலைநகரில் படையினர் - கெரில்லாக்கள் கடும் மோதல்

மேற்கு ஆபிரிக்க நாடான சோமாலியா தலைநகர் மொகடிசியோவிற்கு வடக்கே நேற்று சோமாலிய தேசிய இயக்கக் கெரில்லாக்களுக்கும் அரச படையினருக்கும் இடையில் கடுமையான மோதல்கள் இடம்பெற்றன. மாடுகள் விற்பனைச் சந்தைப்பகுதியில் நடைபெற்ற இம் மோதல் போன்று இதுவரை தாம் கண்டதில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

மோதலில் நான்கு படையினர் மட்டும் காயமடைந்தனர் என சோமாலியா அரசு அறிவித்துள்ளபோதிலும் அப்பகுதியில் பல ராணுவத்தினரின் சடலங்களே காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற இம்மோதல் சோமாலிய தேசிய இயக்க கெரில்லாக்கள் படிப்படியாகத் தலைநகருக்குள் நுழைவதையே காட்டுகிறது.

கடந்த 18-ம் திகதி கெரில்லாக்கள் சோமாலிய விமானப்படையின் பாலீடுப்லே எனும் விமான நிலையத்தை தாக்கி மூன்று விமானங்களை அழித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## டிக்ளார்க்-ஒலிவர் முதற்தடவையாக பேச்சுவார்த்தை

தென்னாபிரிக்க ஜனாதிபதிடிக்ளார்க்கிற்கும் ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தாம்போவிற்கும் இடையில் நேற்று முதற் தடைவையாக நேரடிப் பேச்சுக்கள் நடந்தன.

முப்பது வருட அஞ்ஞாதவாசத்தின் பின் நாடு திரும்பியுள்ள ஒலிவர் தாம்போ நேற்றைய பேச்சுகள் தொடர்பாக கருத்து வெளியிட்டபோது, "தற்போதைய ஜனாதிபதி டிக்ளார்க் கறுப்பினத்தவரின் பிரச்சினைகளை உணர்ந்துள்ளதை அவதானித்ததாகத் தெரிவித்தார்.

## நத்தார் தினத்திற்கு ஐ.ஆர்.ஏ மூன்று நாள் யுத்த நிறுத்தம்

இன்றைய நத்தார் தினத்தை முன்னிட்டு வடஅயர்லாந்தில் மூன்று நாட்களுக்கு யுத்த நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக ஐ.ஆர்.ஏ கெரிலாக்கள் ஒரு தலைப்பட்சமாக அறிவித்துள்ளனர்,

1974 இற்கு பின்னர் ஐ.ஆர்.ஏ கெரில்லாக்கள் நத்தார் தினத்தை முன்னிட்டு யுத்த நிறுத்த அறிவிப்பை விடுத்துள்ளனர். இவ்வறிப்பை அயர்லாந்து அரசும், பிரிட்டிஷ் அரசும் வரவேற்றுள்ளன.

## சோவியத் குடியரசுகளின் இறைமை குறித்து தீர்மானம் நிறைவேறியது

சோவியத் சோஷலிஸ குடியரசு என்ற (U. S. S. R பெயரைத் தொடர்ந்து பேணுவதென நேற்று ரஷ்ய பாராளுமன்றத்தில் தீர்மானம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேறியது. சோவியத்தின் அனைத்து குடியரசுகளினதும் இறைமையும் இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தீர்மானம் குறித்து ஒவ்வோரு குடியரசிலும் அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்துவது என ஜனாதிபதி கொர்பச்சேவ் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## இஸ்ரேல் தாக்கப்படும் என்கிறார் சதாம் ஹுசைன்

வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா போரை ஆரம்பித்தால் இஸ்ரேலை ஈராக் தாக்கும் என

சுன்னாகம் கூட்டத்தில் யோகி

# காயமடைந்த போராளிகளைக் கைது செய்து போராட்டத்தை இந்தியா அவமதிக்கின்றது

காயமடைந்து ஊனமுற்ற போராளிகளை கைதுசெய்ய உடந்தையாக இருந்ததன் மூலம் தமிழக முதல்வர் கருணாநிதி எமக்குத் துரோகம் செய்து விட்டார். இவ்வாறு சுன்னாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் யோகரட்ணம் யோகி தெரிவித்தார். கடந்த சனிக்கிழமை கட்டுவனில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தவென இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த மோதலில் வீரமரணமடைந்த வேங்கைகள் கப்டன் அஜித்தா, கப்டன் ஆஷா ரசிகலா, சாம்சன், ஸ்டாலின் ஆகியோரின் பூதவுடல்களும் அவர்கள் மீட்டெடுத்த ஆயுதங்களும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன.

அங்கு யோகி தொடர்ந்து உரையாற்றுகையில், இந்தியாவில் காயமடைந்த எமது போராளிகளை அனுமதிப்பது தொடர்பாக நாம் முதல்வர் கருணாநிதியுடன் தொடர்பு கொண்டிருந்தோம் அப்போது அவர் மத்திய அரசுடன் தொடர்பு கொண்டதன் பின்னரேயே அனுமதிக்க முடியுமென்று தெரிவித்திருந்தார். பின்னர் மத்திய அரசின் அனுமதியுடனேயே எம்மை அனுமதித்திருந்தார். அவ்வாறு அனுமதியுடன் 'ஊனமுற்ற நிலையில் தங்கியிருந்த எமது போராளிகளைக் கைது செய்துஎமதுபோராட்டத்தை மழுங்கடித்துஎம்மை அவமானப்படுத்துகிறார்கள்.'

போராட்டவரலாற்றில்எத்தனையோ நம்பிக்கைத் துரோகங்களை சந்தித்தவர்கள் நாம். ஆயினும் எமது அளப்பரிய தியாகத்தாலும் தன்னம்பிக்கையாலும் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றோம்' என்று குறிப்பிட்டார். (ப-2,ப-11)

கடமைக்குவராவிடில்சம்பளமற்றலீவு

## ஆஸ்பத்திரி ஊழியர்களுக்கு மினிபஸ் சேவை ஒழுங்கு

யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களின் போக்குவரத்து வசதிக்காக வலிகாமம், வடமராட்சி தென்மராட்சி பகுதிகளிலிருந்து விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சேவையைப் பயன்படுத்தும் ஊழியர்கள் சாதாரண நாட்களில் செலுத்தப்படும் மினிபஸ் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

போக்குவரத்து வசதி செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் கடமைக்குத் திரும்பாத ஊழியர்களின் லீவு சம்பளமற்ற லீவாகக் கருதப்படுமென சுகாதாரப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை இப்போக்குவரத்திற்கு தனியார் வாகனங்களைபயன்படுத்துவதற்கு கூட்டுப்படைத்தலைமையகம் அனுமதி வழங்கிய போதும் டீசல் வழங்குவதற்கு மறுத்து விட்டது. (70)

### கருணாநிதி...

ஆயின் அதை ரெலோவிடம் கொடுப்பேன் என்றும் கூறி கருணாநிதி எம்மை மேலும் இழிவுபடுத்த முனைந்தார்.

இன்றோ இங்கு காயமுற்றுத் தமிழகத்தில் சிகிச்சைக்கென மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்படும் எம் பேராளிகள் கைதாகும் நிகழ்வுகள் கருணாநிதிக்குத் தெரியக்கூடியதாக தொடர்கின்றன. காயமுற்ற போராளிகளை சிகிச்சைபெறஉதவுவேன் என முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய கருணாநிதி இன்று நம்பிக்கைத் துரோகமிழைத்து விட்டார்.

### வயாவிளான்...

சில வீடுகள் அண்மையில் தகர்க்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

வடமூலை கன்னியாஸ்திரிகள் மடத்திற்கு அண்மையிலுள்ள திரு த. தம்பித்துரை என்பவரதும், அதனுடன் அண்மித்திருந்த ஆறு வீடுகளும் உடைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (32)

### திருகோணமலை..

யின் உறவினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று நடைபெற்ற கண்ணிவெடிசம்பவத்தினால் வீதியில் ஓர் பாரிய குழி ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும் இக்குழியில் இருந்தும் சில இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக திருமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒரு வாரத்தில் திரு

பாராளுமன்றத்தில் அனுரா:

## பொருளாதார நெருக்கடிக்கு ஜே.வி.பி, புலிகள் காரணமல்ல

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு ஜே.வி பியும் விடுதலைப்புலிகளுமே காரணம் என அரசு கூறுகிறது. ஆனால் உண்மையாக அவை காரணமல்ல என்று சுதந்திரக்கட்சிஎம்.பி.அனுரா பண்டாரநாயக்கா பாரளுமன்றத்தில்கூறினார்.

இந்த அரசுக்கு சரியான பொருளாதாரக் கொள்கை இல்லாததே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் எனவும் அவர் சொன்னார்.

ஜனசக்தி திட்டம் என்று கூறி அப்பாவி மக்களை ஏமாற்ற வேண்டாம் எனவும் கேட்டுள்ளார். (33)

வடக்குக் கிழக்கு மாகாண

## கல்வியமைச்சுக்கு புதிய செயலாளர்

வடக்குக் கிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சின் புதிய செயலாளராகக் கல்வி நிர்வாக சேவையின் தரம் 1 ஐச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஜனாப் காதர் முஹிதீன் நியமிக்கப்பட்டுள்ளதாக திருகோணமலைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கல்விச் சேவையின் தரம் 1 ஐச் சேர்ந்த வடபகுதியிலுள்ள அதிகாரி ஒருவர் மாகாணக் கல்விப் பணிப்பாளராக திருமலைக்கு மாற்றப்படலாமென்றும் அப்பகுதிக்கு முன்பு பணிப்பாளராக அனுபவம் பெற்றபெண் அதிகாரிஅல்லது கிழக்கு மாகாணத்தில் பணிப்பாளராக இருந்த அனுபவம் வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்படலாமென நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

### யாழ் மாவட்ட...

பிரிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் அறியப்படுகிறது.

ஏற்கனவே எழுபத்தைந்துக்கும் அதிகமான கிராம அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந் நடவடிக்கைகள் ஒரு கிராமசேவை அலுவலர் மூலம் அப்பிரிவுள்ள மககளின் சகல திணைக்களங்கள் சேர்ந்த

### நாற்பது...

டுள்ளன இச்சடலங்களில் துப்பாக்கிச் சூட்டு காயங்கள் காணப்பட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

### பாண்...

மா, மற்றும் பாண் உற்பத்தி உப பொருட்களும் பெற ஒழுங்கு மேற் கொள்ளுமாறும் சங்கம் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இக் கோரிக்கை அத்தியாவசிய சேவைகள் நாயகத்தி

## சதாம் ஹுசைன்

வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா போரை ஆரம்பித்தால் இஸ்ரேலை ஈராக் தாக்கும் என ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் எச்சரித்துள்ளார், இஸ்ரேல் போரில் கலந்து கொள்ளா விட்டாலும் கூட தலைநகர் டெல் அவிவ் ஈராக்கிய இலக்காக மாறும் என அவர் ஸ்பானிஷ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

# படையினர் ஏற்பாடு செய்த பொப் பாடலுக்கு சவூதி அரேபியா தடை!

நத்தார் தினத்தை முன்னிட்டு சவுதி அரேபியாவில் நிலைகொண்டுள்ள பல் நாட்டு ராணுவத்தினர் ஏற்பாடு செய்துள்ள நத்தார் விழாவிற்கு மேற்கத்திய இசைக்கலைஞர்கள் கலந்து கொள்வதை சவூதி அரேபியா தடை செய்துள்ளது,

படையினரின் நத்தார் விழாவில் கலந்து கொள்ள சவூதி வரவிருந்த பிரான்ஸ் நாட்டு பொப் பாடகருக்கு சவூதி அரேபிய குடிவரவு திணைக்களம் அனுமதிவழங்க மறுத்துள்ளது.

இதைக்கண்டிக்கும் முகமாக பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் தனது சவூதி அரேபியா விஜயத்தை ஒத்திப்போட்டுள்ளார்.


## அறிவித்தல்

நத்தார் தினத்தை முன்னிட்டு 1-ம் திகதி வரை கேக் பேக் செய்து கொடுக்கப்படும்.

**அம்பாள் மணி பேக்கரி**

(இலங்கைநாயகி அம்மன் கோவில் அருகாமையில்)
கல்வியங்காடு. 12163


என முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறிய கருணாநிதி இன்று நம்பிக்கைத் துரோகமிழைத்து விட்டார்.

''இந்திய இராணுவத்துடன் நீங்கள் மோதுதல் புத்திசாலித்தனமல்ல, தமிழ் நாடு கோரிப் போராட முடியாது பின்னடைவு காணச் செய்திட்ட பலம்மிக்க படை அது'' எனக் கூறியவர் கருணாநிதி. ஆனால் எம் தலைவர் எவருக்கும் மண்டியிட மாட்டோம், மரணிக்க நாம் தயார் என்று போராடி அந்த இராணுவத்தை விரட்டியடித்து வெற்றிமாலை சூடியவர்.

### உலகத் தமிழர் தலைவர் பிரபா

இத்தகைய பெருமைகளால் எம் தலைவர் தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் இன்று மக்களால் தம் தலைவராகப் போற்றப்படுகின்றார்.

ஆக, உலகத்தமிழர் தலைவர் என்ற பெருமைக்கு பிரபாகரனே உரியவராகிறார்.

மாங்குளம் வெற்றி தென்கிழக்காசியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ வெற்றியின் அடிக்கல் இவ்வெற்றியாகும்" என்றார்.

கப்பட்டதாக திருமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஒருவாரத்தில் திருமலையில் நடந்த இரண்டாவது கண்ணி வெடிச் சம்பவம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வேளை வீரமரணமடைந்த மேஜர் பிறின்ஸ் இன் நினைவு தினம் நேற்று திருமலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

---

### மாவிட்டபுரத்தில்...

னர்,

வீரமரணமடைந்த லெப். ராஜன் (சிவஞானசுந்தரம் குகநாதன். கொக்குவில் மேற்கு) 2 வது லெப். அருள் நேசன் (வல்லிபுரம் பாலேந்திரன் சரசாலை வடக்கு) ஜெரோம் (தருமராசா சசிகரன்சங்கத்தானை)மித்திரன் (செல்வநாதன் பெனடிக் குமார், ஆனைக்கோட்டை) ஆகியோருக்கும்

குப்பிளான் பகுதியில் நடந்த மேயதலில் வீரமரணமடைந்த ஜீவா (சிவபாதம் மஞ்சுளா, செட்டிக்குளம்) எனபவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்

(71)

இந் நடவடிக்கைகள் ஒரு கிராமசேவை அலுவலர் மூலம் அப்பிரிவுள்ள மககளின் சகல திணைக்களங்கள் சேர்ந்த வேலைகளையும் கவனிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவ்க்கப்படுகிறது.

(66)

---

### உண்மைக்குப்...

யாது கஷ்டமுறுவதாகவும் கொழும்பில் தெரிவித்துள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பல கஷ்டங்களுக்கும் இடர்களுக்கும் மத்தியிலும் ஓய்வூதியம் பெறுவோர்களது நிலைமையை உணர்ந்து யாழ் செயலக ஓய்வூதியக் கிளை செயற்பட்டும் கூட, சிலர் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக்கொடுத்து ஓய்வூதியத்தைப் பெற்றமை ஏனைய பதினேழாயிரம் ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளதாக ஓய்வூதியக் கிளை வட்டாரங்கள் தெரிவித்தன.

(66)

சங்கம் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இக் கோரிக்கை அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் இது விடயத்தில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தினது ஒத்துழைப்பும் பெறப்படும் என்றும் பதிலளிக்கப்பட்டுள்ளது.

(74)

---

### மீட்புநிதி...

ளார்.

பங்களிக்க விரும்பும் நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய்உதவி அரசாங்கஅதிபர்பிரிவுகளைச் சேர்ந்தோர் 27-ம் திகதியும்,உடுவில், சங்கானை, தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தோர் 28-ம் திகதி காலை 9.30 மணிக்கும் நண்பகல் 12.00 மணிக்கும் இடையில் கோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

---


இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறறெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 25-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது